வருகின்ற 2021-ம் ஆண்டு செப்டம்பர் மாதம் 06 -ம் தேதி திங்கட்கிழமை பிற்பகல் 4.00 மணிக்கு பவானி நகராட்சி அலுவலகத்தில நகர்மன்றத்தின் அவசர் கூட்டம் நடைபெற உள்ளது. கூட்டத்திற்கு எடுத்துக் கொள்ளப்படும் பொருட்கள் கீழ்கண்டவாறு குறிப்பிடப்பட்டுள்ளது.

**முன்னிலை: திருமதி.தோ.லீனா சைமன்**
**தனி அலுவலர் (ம) ஆணையாளர்**
**பவானி நகராட்சி**

1)இந்நகராட்சிக்கு 15வது மத்திய நிதிக்குழு ஆணைய பரிந்துரை மானியம் 2020-21-ன் கீழ் ரூ.20.00 இலட்சம் மதிப்பீட்டில் Supply, Delivery and Erection of Vertical Turbine motor Pump set in Head Water works at Bhavani Municipality n o 4 by removing the legacy waste of 3100 cu.m in Bhavani Municipality பணியை மேற்கொள்ள நகர் மன்ற தீர்மான எண்.89 , நாள் 31.05.2021-ன் படி நிர்வாக அனுமதி வழங்கப்பட்டு 24.08.2021 அன்று ஒப்பந்தப்புள்ளி கோரப்பட்டதில் Off line-ல் மட்டும் இரண்டு ஒப்பந்தப்புள்ளிகளும், Online-ல் ஒரு ஒப்பந்தப்புள்ளியும் வரப்பெற்றது. Online-ல் வரபெற்ற ஒப்பந்தப்புள்ளி முன் வைப்பு டிதாகை விபரம் சமர்பிக்காத காரணத்தினால் நிராகரிக்கப்பட்டது.

Online-ல் வரப்பெற்ற கீழ்கண்ட இரண்டு ஒப்பந்தப்புள்ளிகளை கூர்ந்தாய்வு செய்யப்பட்டதில் இரண்டு ஒப்பந்தப்புள்ளிகளும் தொழில் நுட்ப தகுதி வாய்ந்ததாக இருந்தது. அதன் அடிப்படையில் இரண்டு ஒப்பந்தப்புள்ளிகளில் விலை விகித பட்டியல் உரை 31.08.2021 அன்று வரப்பெற்ற ஒப்பந்ததாரர்களின் முன்னிலையில் திறக்கப்பட்டு மதிப்பீட்டுடன் ஒப்பு நோக்கியதில் கீழ்கண்டவாறு ஒப்பு நோக்கு பட்டியல் தயாரிக்கப்பட்டது.

| வ.எண். | ஒப்பந்ததாரர் பெயர் | மதிப்பீட்டு தொகை ரூ. (இலட்சத்தில்) | ஒப்பந்தப்புள்ளி சதவிகிதம் அதிகம் / குறைவு |
|---|---|---|---|
| 1 | M/s Alchem Idustries, Mettupalayam. | 20.00 | 4.96 % சதீவிதம் மதிப்பீட்டு விகிதத்தை விட அதிகம் |
| 2 | M/s. Sree Power Engineers Coimbatore | | 8.83 % சதீவிதம் மதிப்பீட்டு விகிதத்தை விட அதிகம் |

மேற்கண்டவாறு ஒப்பு நோக்கு பட்டியல் தயாரிக்கப்பட்டதில் வரப்பெற்ற இரண்டு ஒப்பந்தப்புள்ளிகளில் குறைந்த ஒப்பந்தப்புள்ளி தொகை, மதிப்பீட்டை விட 4.96 % அதிகமாக கொடுத்துள்ள M/s Alchem Idustries, Mettupalayam அவர்களை விலை குறைப்பு செய்ய கேட்டு 31.08.2021 அன்று கடிதம் அனுப்பப்பட்டது.

ஒப்பந்ததாரர் M/s Alchem Idustries, Mettupalayam தற்போது உள்ள மூலப்பொருட்களின் விலைவாசி ஏற்றம் ஆட்கூலி உயர்வு காரணமாக விலை குறைக்க இயலாது என்றும் 24.08.2021 அன்று ஏற்கனவே அளித்த ஒப்பந்தப்புள்ளி விலை விகிதத்தில் 4.96 % குறிப்பிட்டுள்ளதை குறைத்து தர இயாலாது என 02.09.2021 அன்று ஒப்புதல் கடிதம் அளித்துள்ளார்கள்.

ஒப்பந்ததாரர் M/s Alchem Idustries, Mettupalayam அவர்கள் மதிப்பீட்டு விலை விகிதத்தை விட 4.96 % கூடுதலாக அளித்துள்ள ஒப்பந்தப்புள்ளியை மன்றத்தின் முடிவிற்கு வைக்கப்படுகிறது.

**அலுவலக குறிப்பு:**

1. வரப்பெற்ற இரண்டு ஒப்பந்தப்புள்ளிகளில் குறைவாக, மதிப்பீட்டை விட 4.96 % சதவீதம் அதிகமாக பணி செய்து கொடுக்க M/s Alchem Idustries, Mettupalayam அவர்கள் சம்மத கடிதம் கொடுத்துள்ளார்கள். மேற்கண்ட பணி திட்டப்பணியாக உள்ளதாலும் உரிய நேரத்தில் பணி முடிக்க வேண்டியுள்ளதாலும் மீண்டும் ஒப்பந்தப்புள்ளி கோருவதால் காலதாமதம் ஏற்படுவதாலும் மாநில உள்ளாட்சித்துறை பொறியாளர்கள் கையேடு பகுதி-1 பாகம் 2.7.2 ன் படி ஒப்பந்தப்புள்ளியினை ஏற்கலாம்.
2. மதிப்பீட்டிற்கு மேல் ஏற்படும் கூடுதல் செலவினத்தை (4.96 சதவீதம்) பொது நிதியில் இருந்து மேற்கொள்ளவும் மன்றம் அனுமதிக்கலாம்.

2)இந்நகராட்சிக்கு 15வது மத்திய நிதிக்குழு ஆணைய பரிந்துரை மானியம் 2020-21-ன் கீழ் ரூ.25.00 இலட்சம் மதிப்பீட்டில் Reclamation of existing dump yard located at compost yard near new busstand in ward no 4 by removing the legacy waste of 3100 cu.m in Bhavani Municipality பணியை மேற்கொள்ள நகர் மன்ற தீர்மான எண்.89 , நாள் 31.05.2021-ன் படி நிர்வாக அனுமதி வழங்கப்பட்டு 24.08.2021 அன்று ஒப்பந்தப்புள்ளி கோரப்பட்டதில் Off line-ல் மட்டும் இரண்டு ஒப்பந்தப்புள்ளிகள் வரப்பெற்றது.

வரப்பெற்ற கீழ்கண்ட இரண்டு ஒப்பந்தப்புள்ளிகளை கூர்ந்தாய்வு செய்யப்பட்டதில் இரண்டு ஒப்பந்தப்புள்ளிகளும் தொழில் நுட்ப தகுதி வாய்ந்ததாக இருந்தது. அதன் அடிப்படையில் இரண்டு ஒப்பந்தப்புள்ளிகளில் விலை விகித பட்டியல் உரை 31.08.2021 அன்று வரப்பெற்ற ஒப்பந்ததாரர்களின் முன்னிலையில் திறக்கப்பட்டு மதிப்பீட்டுடன் ஒப்பு நோக்கியதில் கீழ்கண்டவாறு ஒப்பு நோக்கு பட்டியல் தயாரிக்கப்பட்டது.

| வ.எண். | ஒப்பந்ததாரர் பெயர் | மதிப்பீட்டு தொகை ரூ. (இலட்சத்தில்) | ஒப்பந்தப்புள்ளி சதவிகிதம் அதிகம் / குறைவு |
|---|---|---|---|
| 1 | M/s Shree Bommu Industries, Coimbatore. | 25.00 | 8.31 % சதீவிதம் மதிப்பீட்டு விகிதத்தை விட அதிகம் |
| 2 | M/s. Green Fine Equipments Coimbatore | | 9.87 % சதீவிதம் மதிப்பீட்டு விகிதத்தை விட அதிகம் |

மேற்கண்டவாறு ஒப்பு நோக்கு பட்டியல் தயாரிக்கப்பட்டதில் வரப்பெற்ற இரண்டு ஒப்பந்தப்புள்ளிகளில் குறைந்த ஒப்பந்தப்புள்ளி தொகை, மதிப்பீட்டை விட 8.31 % அதிகமாக கொடுத்துள்ள M/s Shree Bommu Industries, Coimbatore அவர்களை விலை குறைப்பு செய்ய கேட்டு 31.08.2021 அன்று கடிதம் அனுப்பப்பட்டது.

ஒப்பந்ததாரர் M/s Shree Bommu Industries, Coimbatore தற்போது உள்ள மூலப்பொருட்களின் விலை ஏற்றம் ஆட்கூலி உயர்வு காரணமாக விலை குறைக்க இயலாது என்றும் 24.08.2021 அன்று ஏற்கனவே அளித்த ஒப்பந்தப்புள்ளி விலை விகிதத்தில் 8.31 % குறிப்பிட்டுள்ளதை குறித்த 4.95 % சதவிகித்திற்கு செய்து தர 02.09.2021 அன்று ஒப்புதல் கடிதம் அளித்துள்ளார்கள்.

ஒப்பந்ததாரர் M/s Shree Bommu Industries, Coimbatore அவர்கள்மதிப்பீட்டு விலை விகிதத்தை விட 4.95 % கூடுதலாக அளித்துள்ள ஒப்பந்தப்புள்ளியை மன்றத்தின் முடிவிற்கு வைக்கப்படுகிறது.

**அலுவலக குறிப்பு:**

1. வரப்பெற்ற இரண்டு ஒப்பந்தப்புள்ளிகளில் குறவைாக, மதிப்பீட்டை விட 4.95 மூ சதவீதம் அதிகமாக பணி செய்து கொடுக்க M/s Shree Bommu Industries, Coimbatore அவர்கள் சம்மத கடிதம் கொடுத்துள்ளார்கள். மேற்கண்ட பணி திட்டப்பணியாக உள்ளதாலும் உரிய நேரத்தில் பணி முடிக்க வேண்டியுள்ளதாலும் மீண்டும் ஒப்பந்தப்புள்ளி கோருவதால் காலதாமதம் ஏற்படுவதாலும் மாநில உள்ளாட்சித்துறை பொறியாளர்கள் கையேடு பகுதி -1 பாகம் 2.7.2 ன் படி ஒப்பந்தப்புள்ளியினை ஏற்கலாம்.
2. மதிப்பீட்டிற்கு மேல் ஏற்படும் கூடுதல் செலவினத்தை (4.95 சதவீதம்) பொது நிதியில் இருந்து மேற்கொள்ளவும் மன்றம் அனுமதிக்கலாம்.

ந.க.எண் : 0557/2018/இ1

3)பவானி நகராட்சிக்குட்பட்ட 1வது வார்டு பகுதி வாழ் மக்கள், அத்தப்பன் லே அவுட் ஆகியோரின் விண்ணப்பத்தின்படி, சொக்கராயன் காடு பகுதியில் உள்ள பொதுமக்கள் அப்பகுதியில் முப்பது வருடங்களுக்கு மேலாக வீடு கட்டி, நகராட்சிக்கு சொத்துவரி மற்றும் குடிநீர் கட்டணம் ஆகியவற்றினை செலுத்தி குடியிருந்து வருகின்றனர் என்றும் அப்பகுதியான அத்தப்பன் லே அவுட் மற்றும் வாய்க்கால் ரோடு பகுதி பொது மக்கள் சாலையில் வரும் மழைநீர், வடிகால் செல்லும் வகையில் உரிய கட்டமைப்பு வசதி இல்லாத காரணத்தால் மழைநீர் தேங்கி கொசு உற்பத்தியாகி டெங்கு, மலேரியா, கொரோனா போன்ற நோய்களால் பாதிக்கப்படுகிறோம் என்றும் தெரிந்துள்ளனர். மேலும் மேற்கண்ட மழைநீர் வடிகால் இல்லாத காரணத்தால் தண்ணீர் தேங்குவதால் தேள், பூரான், பாம்பு போன்ற உயிரினங்கள் புகுந்து தொல்லை தருவதாக தெரிவித்துள்ளனர்.

மேற்கண்ட இடம் ஆய்வு செய்யப்பட்டது. 1வது வார்டு பகுதி வாழ் மக்கள் குறிப்பிட்டுள்ளபடி, அத்தப்பன் லே அவுட் மற்றும் வாய்க்கால் ரோடு பகுதி பொதுமக்கள் மனுவில் குறிப்பிட்டுள்ளபடி, பவானி கிராமம், வார்டு ஏ, பிளாக் எண்.1 நகரளவு எண். 16/30-ல் உள்ள காலியிடத்தில் தேங்கி நிற்கின்றது. மேற்கண்ட இடம் தனியாருக்கு சொந்த பாதையாகும். பட்டாதாரர்கள் பட்டா எண்.5748 வி.கோகிலாம்பாள், வி.ராஜ்குமார்,வி.தமிழ்செல்வன் மற்றும் வி.கோகுல கிருஷ்ணன் என்பவர்களுக்கு பாத்தியப்பட்டது.

மேலும் மேற்கண்ட இடத்திற்கு அருகில் உள்ள 2 -வார்டு பொதுமக்கள் நகராட்சிக்கு 09.08.2021-ல் அளித்த விண்ணப்பத்தின்படி வார்டு -ஏ, பிளாக் எண்.1 நகரளவு எண். 16/22 ரீ.சர்வே எண்.755/3 part -ல் ரயத்து மனை என தங்களுக்கு பாத்தியப்பட்ட 114.93மீ நீளம் 3.00மீ அகலமுள்ள சாலையினை நகராட்சிக்கு தான கிரையம் அளிப்பதாகவும் அதற்கான அடிப்படை வசதிகள் செய்து தான ஆவணம் பதிவு செய்து தருவதாகவும் தெரிவித்துள்ளனர். மேலும் 31.8.2021 அன்று பட்டா எண்.5748 இடத்தின் உரிமையாளர்களான வி.கோகிலாம்பாள், வி.ராஜ்குமார், வி.தமிழ்செல்வன் , வி.கோகுல கிருஷ்ணன் மற்றும் 16/22 இடத்திற்கு பாத்தியப்பட்ட நபர்கள் ஆக மொத்தம் 10 நபர்கள் நாள்.18.08.2021-ந் தேதியிட்ட உறுதிமொழி பத்திரம் சமர்பித்துள்ளனர். மேற்கண்ட மனுதாரர்கள் குறிப்பிட்ட பகுதியின் வார்டு எண்.2 16/22 மற்றும் வார்டு எண்.1 அத்தப்பன் லே அவுட் வாய்க்கால் ரோடு பகுதி பொது மக்கள் கோரிக்கையின்படி குறிப்பிட்டுள்ள பகுதிக்கும் 16/30 ன் பட்டாதாரர்கள் பட்டா எண். 5748 -ல் உள்ள 4 நபர்கள் அவர்களது சொந்த இடத்தில் தண்ணீர் தேங்கா வண்ணம் மழைநீர் வடிகால் வசதி செய்து தருவதாகவும் வி.கோகிலாம்பாள், பவானி மற்றும் 10 நபர்கள் ஆகியோர்கள் மேற்கண்ட 18.08.2021 தேதியிட்ட உறுதி மொழி பத்திரத்தில் உறுதி அளித்துள்ளார்கள்.

பட்டா எண்.5748 வி.கோகிலாம்பாள், வி.ராஜ்குமார், வி.தமிழ்செல்வன் , வி.கோகுல கிருஷ்ணன் என்பவர்கள் வார்டு எண். 1-ல் கண்டுள்ள வாய்க்கால் ரோடு பகுதி மற்றும் அத்தப்பன் லே அவுட் பொதுமக்கள் குறிப்பிட்டுள்ளபடி பொதுமக்களின் கோரிக்கையை ஏற்று 16/30 சர்வே எண் பட்டாதாரர்கள் தங்களுடைய சொந்த நிலத்தில் மழைநீர் மற்றும் கழிவு நீர் தேங்குவதால் தங்களுக்கு பாத்தியப்பட்ட சொத்தான சர்வே எண். 16/30 சுமார் 115.00 மீ நீளம் , 16/40 11.40 மீ நீளம் மற்றும் 16/32 -ல் 14.90 மீ நீளம் என்ற இடத்தில் ஆக மொத்தம் 141.30 மீ நீளம் 4.00 மீ அகலத்திற்கு, அடிப்படை வசதிகள் (மழைநீர் வடிகால், சாலை வசதி, குடிநீர் வசதி மற்றும் மின் வசதி ஆகிய அடிப்படை வசதிகள்) தனது சொந்த செலவில் செய்து முடித்து தான பத்திரம் மூலம் நகராட்சிக்கு ஒப்படைப்பு செய்ய அனுமதி கோரி விண்ணப்பம் சமர்ப்பித்துள்ளார்.

பட்டா எண். 5748-ல் பாத்தியப்பட்ட வி.கோகிலாம்பாள் ப.ராஜ்குமார் என்பவர்கள் மற்றும் தமிழ்செல்வன் வி.கோகுல கிருஷ்ணன் என்பவர்கள் வார்டு எண். 1 பகுதி மக்கள் கோரிக்கையின் படியும் , வார்டு எண். 2 பகுதி கோரிக்கையின்படியும் 141.30 நீளம் 4.00m அகல சாலையினையும், 114.93மீ 3.00 மீ அகலமுள்ள பொது நடைபாதை சாலையினையும் ஒருங்கிணைத்து 114.93 x7.00 மீ மற்றும் 26.40 மீ x 4.00 மீ அகலம் ஆகிய நீளங்களில் தமிழ்நாடு மாவட்ட நகராட்சிகளின் சட்டம் 1920 பிரிவு 178, 179, 180 மற்றும் 181 ஆகிய பிரிவுகளின்படி மேற்கண்ட சாலைக்கு, சாலை வசதி, மழைநீர் வடிகால் வசதி, குடிநீர் வசதி மற்றும் மின் வசதி செய்து ஆகிய அனைத்தையும் தங்களது சொந்த செலவில் செய்து நகராட்சிக்கு தானமாக அளிப்பதாக நகராட்சிக்கு சமர்ப்பித்துள்ள 18.08.2021-ந் தேதியிட்ட உறுதி மொழிப்பத்திரத்தில் குறிப்பிட்டுள்ளார்கள்.

மேற்கண்ட வார்டு எண். 1 வாய்க்கால் ரோடு, அத்தப்பன் லே அவுட் பகுதி பொதுமக்களின் நீண்ட நாள் கோரிக்கைக்கு தீர்வு காணும் நோக்கிலும் வார்டு எண். 2 பகுதி மக்கள் கோரிக்கையின் படி மேற்கண்ட சாலை அமைக்கும் பட்சத்தில் மேற்கண்ட வார்டு எண்.1 பகுதி பொதுமக்கள் ,செங்காடு, சொக்கராயண்காடு, வாய்க்கால் ரோடு, அத்தப்பன் லே அவுட், காமராஜ் நகர் சாலை (கவுண்டர் நகர்) வழியாக உள்ள 10 அடி நகராட்சி மற்றும் குருப்பநாயக்கன்பாளையம் ஊராட்சிக்கு பாத்தியப்பட்ட 10 அடி சந்து வழியாக மேட்டூர் சாலையை வந்தடையலாம். எனவே, மேற்கண்ட வார்டு 1 மற்றும் 2 பொதுமக்கள் கோரிக்கையின்படி சர்வே வார்டு எண். ஏ, பிளாக 16/30, 16/22 இரண்டையும் ஒன்றினைத்து 114.93 மீ நீளம் x 7.00 மீ அகலத்திற்கும் 26.40 மீ நீளம் x 4.00 மீ அகலம் உள்ள சாலைகளுக்கு அடிப்படை வசதிகளை பட்டா எண். 5748-ன்

உரிமையாளர்கள் வி.கோகிலாம்பாள், வி.ராஜ்குமார், வி. தமிழ்செல்வன் மற்றும் வி.கோகுல கிருஷ்ணன் ஆகியோர்கள் தங்களது சொந்த செலவில் பவானி நகராட்சியின் பொறியாளர் பிரிவின் நகராட்சி பொறியாளர் குறிப்பிடும் மட்டத்திற்கும், அகலத்திற்கும் தூரத்திற்கும் அடிப்படை வசதிகள் செய்து மேற்கண்ட சாலையினை தான ஆவணம் மூலம் நகராட்சி ஆணையர் பெயருக்கு பத்திரப்பதிவு செய்ய மன்றத்தின் அனுமதி வேண்டப்படுகிறது.

அலுவலக குறிப்பு : மன்றம் அனுமதிக்கலாம்.
(ந.க.எண்.1172/2021/எப்1)

அனைத்து சாலைகளையும் அளவீடு செய்து சாலை

4)பவானி நகர எல்லைக்குட்பட்ட பதிவேடு தயாரித்து அவைகளை Auto Cadல் மூலம் Town Map தயாரிக்கும் பணி, செலவுத்தொகை ரூ.20,000/- க்கு நகர மன்ற தீர்மான எண் : 186, நாள்: 31.08.2021ல் அனுமதி அளித்துள்ளதன் பேரில் 03.09.2021 அன்று விலைப்புள்ளி கோரப்பட்டதில் கீழ்கண்ட மூன்று விலைப்புள்ளிகளின் ஒப்பதலுக்குப் பட்டியல் தயாரிக்கப்பட்டு மன்றத்தின் பார்வைக்கும், முடிவிற்கும் வைக்கப்படுகிறது.

| வ.எண் | விபரம் | திரு.பி.லோகநாதன் ஒப்பந்ததாரர் | திரு.எஸ்.பாலசுப்ரமணியன் ஒப்பந்ததாரர் | திரு.பி.ஏ.செல்லப்பன் ஒப்பந்ததாரர் |
|---|---|---|---|---|
| 1 | Auto cad மூலம் Town Map வரைதல் | ரூ.700/- | ரூ.600/- | ரூ.730/- |
| 2 | AO size colour print | ரூ.850/- | ரூ.800/- | ரூ.900/- |
| 3 | A1 size colour print | ரூ.500/- | ரூ.450/- | ரூ.520/- |
| 4 | A2 size colour print | ரூ.320/- | ரூ.300/- | ரூ.350/- |

**அலுவலக குறிப்பு:**

வரப்பெற்ற மூன்று விலைப்புள்ளிகளில் வரிசை எண்:1 முதல் 4 வரை உள்ள இனங்களுக்கு குறைந்த விலைப்புள்ளி அளித்துள்ள திரு.த. பாலசுப்ரமணியன் அவர்களின் விலைப்புள்ளியை மன்றம் ஏற்கலாம்.

ந.க.எண் : 1303/2021/இ1

5)நகராட்சிகளின் நிர்வாக இயக்குநர், சென்னை அவர்களின் கடித ந.க.எண்: 14000/2021/இ1, நாள்: 09.09.2021இல் நகர எல்லைக்குட்பட்ட பகுதிகளில் தெருவிளக்குகள் அமைக்கும் பொருட்டு விரிவான திட்ட அறிக்கையில் கூடுதலாக Town Map ல் தெருவின் பெயர், நீளம், அகலம், எந்த வகையான காலையில் புதியதாக அமைக்க உள்ள தெருவிளக்குகளின் விபரம், பழைய தெருவிளக்குகள் உள்ள இடங்கள் ஆகிய விபரங்களை Auto Cadல் Town Map ல் குறியீடு செய்து திட்ட அறிக்கையுடன் சமர்பிக்க அறிவுறுத்தியுள்ளார். எனவே, Auto Cadல் குறியீடு விபரங்களை Auto Cadல் Town Map ல் குறியீடு செய்ய வேண்டியுள்ளது. இதற்கு ஆகும் உத்தேச செலவினத்தொகை ரூ.20000/-ற்கு மன்றத்தின் அனுமதி வேண்டி வைக்கப்படுகிறது.

**அலுவலக குறிப்பு:**

1) மன்றம் அனுமதிக்கலாம்.
2) பொது நிதி 2021-22 இல் செலவை மேற்கொள்ள மன்றம் அனுமதிக்கலாம்.

ந.க.எண் : 1399/2021/இ1